**ARTICLE 65 | Research Article – Peer Reviewed**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 75–80

# கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள் என்ற கவிதைத்தொகுப்பு உணர்த்தும்பண்பாட்டு பதிவுகள்

*ஆய்வாளர்*: **வெ. வளர்மதி (MKU23PFOL11214)**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழாய்வுத் துறை,தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பல்கலை நகர், மதுரை

*ஆய்வு நெறியாளர்*: **முனைவர் ச. தனலட்சுமி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## Abstract

This research article examines the cultural representations found in Sakthi Jothi’s poetry collection Kanavin Mutrathil Tharaiyirangum Tharaigal. Culture encompasses the way of life, customs, food practices, relationships, emotions, and the relationship between human beings and nature within a society. The collection records various cultural elements through poems that portray a life closely connected with nature, love, food culture, motherhood, and seed dormancy. Natural elements such as rain, soil, plants, and mushrooms, along with everyday practices such as eating ayirai fish and a mother giving a ball of rice to her child, emerge as significant markers of cultural life. The emotions associated with love and separation also reflect the emotional dimensions of human culture. Furthermore, the seed and the process of pollination represent the interdependence and continuity of life. Thus, this study highlights how Sakthi Jothi’s poems function as cultural records that connect human life with nature and everyday lived experiences.

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை சக்தி ஜோதியின் கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் பண்பாட்டுப் பதிவுகளை ஆராய்கிறது. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் வாழ்வியல், பழக்கவழக்கம், உணவு, உறவுகள், உணர்வுகள் மற்றும் இயற்கையுடனான தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இத்தொகுப்பில் இயற்கையோடு இணைந்த வாழ்வியல், காதல், உணவுப் பண்பாடு, தாய்மை, விதையுறக்கம் போன்ற கூறுகள் கவிதைகளின் வழியாகப் பதிவாகியுள்ளன. மழை, மண், தாவரம், காளான் போன்ற இயற்கைக் கூறுகளும், அயிரை மீன் உண்ணுதல், தாய் சோற்றுருண்டை கொடுத்தல் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளும் பண்பாட்டின் அடையாளங்களாக வெளிப்படுகின்றன. மேலும், காதல் மற்றும் பிரிவின் உணர்வுகள் மனிதர்களின் உணர்வியல் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. விதை மற்றும் மகரந்தச் சேர்க்கை வழியாக உயிர்களின் ஒன்றையொன்று சார்ந்த வாழ்வும் பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறு, கவிதைகள் மனித வாழ்வையும் இயற்கையையும் இணைக்கும் பண்பாட்டு ஆவணங்களாக அமைவதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** Culture, Cultural Representations, Nature-oriented Life, Love, Food Culture, Motherhood, Seed Dormancy, Human–Nature Relationship. | பண்பாடு, பண்பாட்டுப் பதிவுகள், இயற்கையோடு இணைந்த வாழ்வியல், காதல், உணவுப் பண்பாடு, தாய்மை, விதையுறக்கம், இயற்கை-மனித உறவு.

முன்னுரை

பண்பாடு என்பது மனிதனின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது. ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், உறவுகள், உணர்வுகள், நம்பிக்கைகள் மற்றும் இயற்கையுடனான தொடர்பு ஆகியவை அதன் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இலக்கியங்கள் இத்தகைய வாழ்வியல் கூறுகளைப் பதிவு செய்து, ஒரு காலத்தின் பண்பாட்டு நினைவுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்றன. அந்த வகையில், சக்தி ஜோதியின் கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளின் வழியாக வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

பண்பாடு

தமிழ் மக்களின் காலக் கண்ணாடி பண்பாடு ஆகும் .பண்பாடு என்னும் வினைச்சொல்,பண்படுதல், சீர்படுதல் அல்லது திருந்துதல் என்ற பொருளில் வருவதாகும்.

குறிப்பிட்ட நாடு,இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருட்கள் போன்றவற்றின் மொத்தம் கலாச்சாரம்

பிறரிடத்தில் அல்லது பலர் முன்னிலையில் நடந்து கொள்ள வேண்டிய முறை (கிரியாவின் தற்கால தமிழ் அகராதி விரிவாக்கித் திருந்திய புதிய பதிப்பு, ப. 887)

என்று கிரியாவின் தற்கால தமிழ் அகராதி ‘பண்பாடு’ குறித்து விளக்கம் தருகிறது.

ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடாகும். இதுதான் மானிடவியல் அல்லது சமூகவியல் பண்பாட்டுக்குக் கூறும் இலக்கணம் ஆகும். பண்பாடு என்றவுடன் ஏதோ ஓர் உயர்ந்த பண்புடைமை என்ற எண்ணம் தோன்றுவது உண்டு.பண்பாடு என்பது ஒவ்வொருவரும் சமுதாயத்திடமிருந்து பெரும் செல்வமாகும். இது சடப்பொருட்கள், சடப் பொருட்கள் அல்லாதன என்று இருவகைப்படும். வீடுகள் கருவிகள், ஆடைகள், அணிகள் போன்றவை சடப் பொருட்கள். மொழி, தொழில், மனப் போக்கு, கொள்கைகள், வழக்கங்கள், அறநெறி போன்றவை சடப்பொருள் அல்லாதன. (கலைக்களஞ்சியம், ப. 690)

என்று கலைக்களஞ்சியம் பண்பாட்டை இரு வகையாகப் பிரித்து நமக்கு அளிக்கிறது.

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழு தொகுதியாகும் (பண்பாட்டு மானிடவியல், ப. 152)

என்று புகழ்பெற்ற மானிடவியல் அறிஞர் எட்வர்ட் பர்டன் டைலர் வரையறுக்கிறார்.

இயற்கையோடு இணைந்த வாழ்வியல்

மின்னலும், இடியும், மழையும் இல்லாத அமைதியான அதிகாலையில் பின்வாசலைத் திறந்து பார்க்கும் கவிஞர், மாதுளைத் தூரின் அருகில்

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

பூத்திருக்கும் சின்னஞ்சிறு வெண்காளானைக் காண்கிறார். அந்த வெண்காளான், முந்தைய மழைநாளின் ஈரத்தை நினைவுக்குக் கிளர்த்துகிறது. அதிகாலையின் அமைதி, இயற்கையின் நுண்ணிய மாற்றங்களை உணர்ந்து ரசிக்கும் மனநிலையை உருவாக்குகிறது. மழை, மண், தாவரம், காளான் போன்ற இயற்கைக் கூறுகளை அன்றாட வாழ்வின் அனுபவங்களோடு இணைத்துப் பார்க்கும் பார்வை இக்கவிதையில் வெளிப்படுகிறது.

மின்னவும் இல்லை
இடிக்கவும் இல்லை
பொழியவும் இல்லை
ஆனாலும்
விடியலில்
பின் வாசல் திறந்து வந்த போது இன்னமும் அரும்பு விடாத
சின்னஞ்சிறு
மாதுளை தூருக்கருகே
பூத்திருந்த வெண்காளன்
இரவெல்லாம்
மின்னல் வெட்டி
இடி இடித்து
பெய்தோந்ததொரு
மழை நாளின் ஈரத்தை
நினைவில் கிளர்த்துகிறது
இக்கோடையிலும்” (ப.60)

என்ற கவிதையில்மழை, மண், தாவரம், காளான் போன்ற இயற்கைக் கூறுகளை அன்றாட வாழ்வியல் அனுபவங்களோடு இணைத்துப் பார்க்கும் பண்பாட்டு மனநிலை இக்கவிதையில் பதிவாகிறது. எனவே, இக்கவிதை இயற்கையோடு இணைந்த வாழ்வியல் பண்பாட்டுப் பதிவாக அமைகிறது.

காதல்

மனித வாழ்வில் காதல் என்பது தனிப்பட்ட உணர்வாக மட்டுமன்றி, சமூக வாழ்வியலோடும் பண்பாட்டோடும் தொடர்புடையதாக அமைகிறது. காதலில் ஏற்படும் மகிழ்ச்சி, பிரிவு, ஏக்கம், துயரம் போன்ற உணர்வுகள் மனிதர்களின் உணர்வியல் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இதனைச் சக்தி ஜோதியின் கவிதை,

“தெவிட்டாத காதலின் பரவசத்திலும்
திடுமென நிகழுமதன்
வலி மிகு பிரிவிலும்
சொற்களற்ற
துளி கண்ணீரே
அந்தந்த கணங்களின்
மெய்மைமைக்குச் சாட்சியாகிறது
எப்போதும்”(ப.28)

என்ற வரிகளில் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் கண்ணீர் வெளிப்படுவது மனிதர்களின் இயல்பான உணர்வியல் வெளிப்பாடாகும். இதன் மூலம் காதல், பிரிவு, ஏக்கம், கண்ணீர் ஆகியவை இணைந்த மனித வாழ்வியல் பண்பாடு கவிதையில் பதிவாகியுள்ளது. இதே கருத்தை அடியொற்றி திருவள்ளுவரும்,

“தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்

முன்னம் உணர்ந்த வளை"(குறள்:1277)

குளிர்ந்த துறைகளுக்குச் சொந்தக்காரரான அவர் என்னை உடலால் கூடி உள்ளத்தால் பிரிந்திருப்பதை என்னைக் காட்டிலும் என் கை வளையல்கள் முன்னமே அறிந்துவிட்டன.சக்தி ஜோதி கண்ணீரை உணர்வின் மெய்மைக்குச் சாட்சியாகக் காட்டுகிறார்; திருவள்ளுவர் வளையல் கழல்வதன் வழியாகப் பிரிவுத் துயரத்தை உணர்த்துகிறார்.

உணவுப் பண்பாட்டில் தாய்மை

ஆறு கரைபுரண்டு ஓடும் காலத்தில் கிடைக்கும் அயிரை மீனை விரும்பி உண்ணும் பெண்ணின் இளமைக்கால வாழ்வியல் நினைவுகள் இடம்பெறுகின்றன. ஆற்றில் கிடைக்கும் மீனை உணவாகக் கொள்ளும் பழக்கம், ஆற்றைச் சார்ந்த கிராமப்புற மக்களின் இயற்கையோடு இணைந்த உணவுப் பண்பாட்டைப் புலப்படுத்துகிறது. மீன் உண்ணும்போது தொண்டையில் முள் சிக்கிக்கொள்வதும், அதனை அகற்றுவதற்காகத் தாய் சோற்றை நன்றாகக் குழைத்து உருண்டையாக்கி விழுங்கச் செய்வதும் அன்றாடக் குடும்ப வாழ்வில் காணப்படும் அனுபவமாக அமைகிறது. கண்களில் நீர் வருமளவுக்கு அந்தச் சோற்றை விழுங்கச் செய்யும் தாயின் செயல், குழந்தையின் மீதான அக்கறையையும் தாய்மையின் பரிவையும் வெளிப்படுத்துகிறது. இவ்வாறு அயிரை மீன் உண்ணும் பழக்கம், சோற்றை உணவாகப் பயன்படுத்தும் முறை, குழந்தையைப் பராமரிக்கும் தாயின் செயல்பாடு ஆகியவற்றின் வழியாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் உணவுப் பண்பாட்டையும் குடும்ப வாழ்வியல் மரபையும் இக்கவிதை பதிவு செய்கிறது.

"ஆறுகரை புரையோடிய வருடங்களில்
அயிரைமீனைவிரும்பியுண்ணும்
பருவமொன்றும்
அவளுக்கிருந்தது
தொண்டையில் சிக்கிக் கொண்ட
முள்ளை அகற்ற
குழைந்து வடித்த சோற்று உருண்டையை
கண்களில் நீர்
வழிய வழிய விழுங்கவைத்தாள்
அம்மா"(ப.75)

இதைப் போலவே தமிழச்சி தங்க பாண்டியனும்,

"சின்ன மகளுக்கு
ஆரோக்கியமான அம்மாவை விட
உடல் நலம் குறைவான
அம்மாவைச் சற்று கூடுதலாக
பிடித்திருபந்ததில்
வியப்பேதுமில்லை"(தமிழச்சி தங்கபாண்டியன், மஞ்சணத்தி,ப.53)

என்ற வரிகளில் ஆரோக்கியமாக இருக்கும் அம்மாவைவிட உடல்நலம் குன்றிய அம்மாவையே அவளுக்குச் சற்று அதிகமாகப் பிடிக்கிறது. தோழியின் மீதான கோபம், சோர்வு, வீட்டுப்பாடம், தனக்குப் பிடித்த உணவுப் பொருட்கள் போன்ற அன்றாட அனுபவங்களை அம்மாவிடம் பகிர்ந்து கொள்ளும் குழந்தை, அவற்றைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளவும், தன்னோடு உரையாடவும் அம்மாவால் இயலாமல் போகும் தருணங்களை ஏமாற்றங்களாகக் கணக்கில் வைத்திருக்கிறாள். ஆனால் அம்மாவின் கால் உடைந்து சுகவீனமடைந்து வீட்டிலேயே இருக்கும் நிலை, குழந்தைக்கு

எதிர்பாராத மகிழ்ச்சியை அளிக்கிறது. “அம்மா ஒரு மாதம் இருப்பாள்” என்ற எண்ணத்தில் அவளை அணைத்துக்கொள்ளும் மகளின் கண்களில் தெரியும் மகிழ்ச்சி, தாயின் உடல்நலக் குறைபாட்டை விரும்புவது அல்ல; மாறாக, எப்போதும் தன்னுடன் இருக்க முடியாத அம்மா இப்போது தன்னுடன் நீண்ட நேரம் இருப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை குழந்தை அன்போடு கொண்டாடுவதாகும். சக்தி ஜோதியின் கவிதை தாய் குழந்தையின் உடல் துன்பத்தைப் போக்கும் பரிவை முன்னிறுத்துகின்ற நிலையில், தமிழச்சியின் கவிதை தாயின் அருகாமைக்காக ஏங்கும் குழந்தையின் உளவியல் உணர்வை முன்னிறுத்துகிறது.

விதையுறக்கம்

விதை என்பது வெறும் தாவரத்தின் தொடக்கநிலை மட்டுமல்ல; அது எதிர்கால உயிர்ப்பையும் வளர்ச்சியையும் தன்னுள் தாங்கியிருக்கும் இயற்கையின் படைப்பாற்றலின் குறியீடாகும். பருவமாற்றத்தால் பூமி பூத்துக் குலுங்கும்போது, பூக்களை நாடி வரும் வண்ணத்துப்பூச்சியின் செயல்பாட்டின் வழியாக மகரந்தச் சேர்க்கை நிகழ்கிறது. அதன் தொடர்ச்சியாக உருவாகும் விதைக்குள் எதிர்கால விருட்சத்தின் சாத்தியம் உறங்கிக் கிடக்கிறது.

“பருவத்தின்
கொடையால்
. பூமி
பூத்து நிற்கையில்
தேடி வந்து
. தேன் குடிக்கும் வண்ணத்துப்பூச்சி
அன்னிச்சையாய்
நிகழ்த்திடும்
அயல் மகரந்தச்சேர்க்கையால்
சூல்கொள்ளும்
விதையொன்றிற்குள் உறங்குகிறது
முளைத்தெழுந்து
வானத்தைத் தொடும் கிளைகளோடு
விரிந்து நிற்கப் போகும்
ஒரு விருட்சத்தின்
கனவு”(ப.14)

என்ற வரிகளில் உயிர்களின் ஒன்றையொன்று சார்ந்த வாழ்வையும் இயற்கையின் தொடர்ச்சியையும் மதிக்கும் வாழ்வியல் பண்பாடு இக்கவிதையில் பதிவு செய்யப்படுகிறது

முடிவுரை

சக்தி ஜோதியின் கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள், இயற்கை மற்றும் மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பல்வேறு பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்துகின்றன. இயற்கையோடு இணைந்த வாழ்வியல் பதிவுகளில் மழை, மண், தாவரம், காளான் போன்ற இயற்கைக் கூறுகள் அன்றாட வாழ்வியல் அனுபவங்களோடு இணைக்கப்படுகின்றன. காதல் மற்றும் பிரிவு சார்ந்த கவிதைகளில் கண்ணீர், ஏக்கம், துயரம் போன்ற உணர்வுகள் மனிதனின் உணர்வியல் பண்பாட்டைப் பதிவு செய்கின்றன. அயிரை மீன் உண்ணுதல், சோற்றுருண்டை மூலம் தொண்டையில் சிக்கிய முள்ளை அகற்றுதல் போன்ற நிகழ்வுகள் குறிப்பிட்ட நிலப்பரப்பின்

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

உணவுப் பண்பாட்டையும், தாயின் பரிவு குடும்ப வாழ்வியலோடு இணைந்திருப்பதையும் வெளிப்படுத்துகின்றன. அதேபோல், விதை, மகரந்தச் சேர்க்கை, விருட்சம் ஆகிய இயற்கைச் செயல்பாடுகளின் வழியாக உயிர்களின் ஒன்றையொன்று சார்ந்திருத்தலும், உயிர்த்தொடர்ச்சியைப் பற்றிய இயற்கைநோக்கும் வெளிப்படுகின்றன..

## துணைநூற் பட்டியல் (References)


1. சக்தி ஜோதி, கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள், டிஸ்கவரி புக் பேலஸ்,#6, மகாவீர் காம்ப்ளக்ஸ் முனுசாமி சாலை கே. கே .நகர் மேற்கு சென்னை-600078.
2. க்ரியாவின் தற்கால அகராதி, திருந்திய பதிப்பு, சென்னை, 1983
3. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சி கழக வெளியீடு, தொகுதி ஆறு சென்னை-5,1960
4. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2009.
5. தமிழச்சி தங்கபாண்டியன், மஞ்சணத்தி, உயிர்மை பதிப்பகம்,11/29, சுப்ரமணியபுரம் தெரு அபிராமபுரம் ,சென்னை 600018
6. நாராயண வேலுப்பிள்ளை, திருக்குறள், நர்மதா பதிப்பகம்,10, நானா தெரு பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை-600017.